உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

# ஸரஸ்வதி பூஜை.

ப்ரசுரம் 10

புரட்டாசிமீ 24உ, வெள்ளிக்கிழமை

10—10—1947

## வேத தர்ம சாஸ்த்ரபரிபாலன ஸபை,

( Regd. )

கும்பகோணம்.

( விலை அணா ஒன்று )

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

# ஸரஸ்வதி பூஜை.

நவராத்திரியில் மஹா நவமியன்று ஸ்ரீ ஸரஸ்வதி பூஜை செய்கிறோம். ஸ்ரீ மஹாஸரஸ்வதி பரமசிவனுடைய ஸஹோதரி. மஹாவிஷ்ணுவின் ஸோதரி பார்வதி தேவி. பரமசிவனுக்கு ஜடையும், சந்த்ரகலையும், முக்கண்ணும், சுத்தஸ்படிக ஸ்வரூபமும் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளன. ஞானத்தைக் கொடுக்கும் பரமசிவனுடைய தக்ஷிணாமூர்த்தி அவஸரத்தில் கையில் புஸ்தகமும் கூறப்பட்டுள்ளது. அந்த ஸதாசிவ மூர்த்தியே ஸர்வ வித்யைகளுக்கும் ஈசானன், அல்லது ப்ரபு, என்று வேதம் கூறுகின்றது. இவ்விதம் மேற்கூறப்பட்டுள்ள ஸகல லக்ஷணங்களும் ஸரஸ்வதியிடம் பொருந்தியுள்ளது. புஸ்தகம், ஸ்படிகமாலை, வெண்ணிறம், சந்த்ரகலை, ஜடை, முக்கண், ஞானுனுக்ரஹம் இவைகளெல்லாம் ஈசனுக்கும் ஸரஸ்வதிக்கும் பொதுவானவை. கலக்கத்தைக் கொடுக்கும் காமமே தெளிவைக்கொடுக்கும் ஞானத்திற்கு இடையூறு. காமனை எரிக்கும் மூன்றும் கண் ஞானத்திற்குத் துணையாக நிற்கிறது. ஸூர்யனுடைய பிம்பம் ஒளியைக் கொடுப்பினும் தாபத்தை வ்ருத்திசெய்கின்றது. சந்த்ரகலையோ, ஒளியையும் கொடுத்து தாப சாந்தியையும் கொடுக்கின்றது. அதிலும் பிறைச் சந்திரன் வரவர ஞான வளர்ச்சிக்கு அறிகுறியாக நிற்கின்றது. ஸ்படிகம் களங்கமில்லாத் தன்மையை அறிவிக்கின்றது.

ஆதலின், இந்த லக்ஷணங்களெல்லாம் வித்யாபதியான ஈசானனுக்கும், வித்யாஸ்வரூபிணியான ஸரஸ்வதி தேவிக்கும் ஒன்றுகப் பொருந்தியவை. த்வந்தங்களற்று, தெளிவைக் கொடுக்கும் வாணி தேவிக்கு “சாரதா” என்ற மற்றொரு பெயரும் உண்டு. தென்நாட்டில் “நகரேஷு காஞ்சீ” என்னும் ஸ்ரீ காஞ்சிமாநகரத்தில் காமகோடிபீடம் இருப்பதுபோல், வடநாட்டில் பாரததேவிக்கு முகமண்டலத்தைப் போலிருக்கும் வெண்மையான காஷ்மீர மண்டலத்தில் ஸ்ரீ சாரதாபீடமும் ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீ காஞ்சியில் காமகோடிபீடத்தைச் சார்ந்த ஸ்ரீ மடத்திற்கும் சாரதா மடம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது.

சரத்காலத்தில் ஸ்ரீ பாரதபூமியே நிர்த்வந்தமாயும், சாந்தமாயும், ப்ரகாசமாயும் விளங்குகின்றாள். பங்குனி, சித்திரை மாதங்களில் நம் நாட்டில் உள்ள உஷ்ணத்தை விட பதின்மடங்கு அதிகமுள்ள தாபம் டிலலி, காசி, ப்ரயாகை முதலிய இடங்களில் காணப்படும். அவ்வடநாட்டுப் ப்ரதேசங்களில் மார்கழி மாதம் நம் தென் நாட்டை விட பதின்மடங்கு அதிகமான குளிர்கொண்டிருக்கும். வைகாசி, ஆனி மாதங்களில் விந்த்ய பர்வதத்தையுடைய மத்ய மாகாணத்திலும், ஸஹ்ய பர்வதத்தையுடைய குடகு மலையாள ப்ராந்தங்களிலும் ஒரே இடைவிடா மழை பொழிந்துகொண்டு இருக்கும். சரத்ருதுவின் ஆரம்பமான ஆச்வயுஜ சுக்லபக்ஷத்திலோ காஷ்மீரம், ஹஸ்தினபுரம், காசி, கல்கத்தா, காஞ்சி, குடகு, கன்யாகுமரி முதலிய பாரதகண்டத்திலுள்ள ஸகல ப்ராந்தங்களிலும் ஒரு நாட்டிற்கும் மற்ற நாட்டிற்கும் பேதமற்று, அபேத நிலையில் சீதோஷ்ணங்கள் என்னும் த்வந்தங்கள் விலகி, எல்லா நாடும் சமரஸமாய், வெண்ணிறமான மேகங்களும், சாந்தமான ஸூர்ய ப்ரகாசமும், அஸ்தமித்தவுடன் சரத்கால சந்த்ரனுடைய நிலவும் நிலாவி உலகமே வித்யாதிதேவதையான தெளிவான ஸ்வரூபமாக விளங்குகின்றது.

வெளியுலகம் தன்மயமாகும்பொழுது, உள்ளத்தையும் தன்மயமாக்கின், உள்ளும் புறமும் ஒன்றாகி, ஸுலபமான அனுக்ரஹ சித்திபெறலாம். உதாரணமாக, நம் நாட்டின் பெரியோர்கள் எல்லோரும் காலையில் எழுந்தவுடன் 'ஹரி நாராயண' என்ற ஸ்மரணத்தையும், ஸந்த்யாகாலத்தில் நாராயணனின் ஆலயங்களிலெல்லாம் கவாட கடனம் பண்ணியிருக்க, சிவாலயங்களிலும் தெருத் திண்ணைகளிலும் பஸ்மதாரிகளாய் விசேஷமாக சிவஸ்மரணத்தையும் செய்வதைக் கண்டிருக்கிறோம். பரமசிவன் ச்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்னும் அவஸரத்தில், ஸம்ஹாரம் எனனும் பதத்திற்கு நாசம் என்னும் பொருள் கொள்ளாமல், அநாதியான ப்ரபஞ்சம் தனது காரண ஸ்வரூபத்தில் ஒடுங்குமிடம், என்னும் வேதப்பொருள் கொள்ளும்பொழுது, ஒவ்வொரு ப்ராணியின் தூக்கத்தில் எல்லா இந்த்ரிய சக்திகளும் தவநிலையில் ஒடுங்குவதைப் போல், ப்ரபஞ்சத்தின் முடிவில் ஸகல சராசரங்களும் சிவஸ்வரூபத்தில் அடங்கி ஒடுங்கி நிற்கின்றன. ப்ரபஞ்சத்தின் முடிவைப்போல ஒவ்வொரு நாள்

பசலின் முடிவிலும் தாபம் ஒடுங்குகிறது; சப்தம் அடங்குகிறது; ஆனினங்களும், பறவைகளும் தத்தம் பட்டிகளிலும், கூடுகளிலும் அடங்குகின்றன. இந்தக் காலமே சிவஸ்வரூபத்தின் அதிகார காலம். ஊரெல்லாம் பறக்கும் உள்ளமென்னும் பறவையும் ஒடுங்கிச சாந்த நிலையை அடையவேண்டுமென்னும் பேரானந்தஅவா கொண்டவர்கள் இயற்கையடங்கும்போது தங்கள் உள்ளத்தையும் தம் நிலையாகிய சிவனிடத்தில் அடக்க எண்ணங் கொள்ளல், ஸகஜமாயும் ஸுலபமாயும் ஸபலமாகிறது. இதுவே ஸந்த்யாகாலத்தில் பெரியோர்கள் சிவஸ்வரூபத்தில் லயிப்பதற்குக் காரணம். கீழ்காற்று அடிக்கும் போது கடலில் கப்பலோட்டும் மாலுமி மேற்றிசை நோக்கிப் புறப் படுவது ஸஹஜமும் ஸுலபமுமன்றோ! அதுபோல உலகமெல்லாம் ஸமநிலையும், வெண்ணிறமும், சாந்தமும், தெளிவும் அடையும் பொழுது இக் குணங்களே உருவெடுத்து வந்த ஸ்ரீ ஸரஸ்வதிதேவி யின் ஆராதனத்தைச் செய்து ஸகல பக்தகோடிகளும் ஞானமும் தெளிவும் அடைவது இயற்கையாகும்.

## ஸ்ரீ ஸரஸ்வதியைப் பூஜிக்கவேண்டிய க்ரமம்.

ஆச்வயுஜ மாஸத்து சுக்லபக்ஷத்தில் (புரட்டாசி மாதம் அமா வாசைக்குப் பின்வரும் வளர் பிறை) வரும் மூல நக்ஷத்திரத்தன்று பீடத்தில் வெண்பட்டைப் பரப்பி, அதன்மேல் வீட்டிலுள்ள எல் லாப் புஸ்தகங்களையும் புஸ்தக மண்டலாகாரமாக ஸ்தாபித்து, அந் தப் புஸ்தக மண்டலத்தில் ஸ்ரீ ஸரஸ்வதி தேவியை ஆவாஹனம் செய்யவேண்டும். ஆவாஹனத்திற்கு முன் ஹ்ருதயத்தில் ஸரஸ்வ தியை த்யானம் செய்துகொண்டு, அந்தத் த்யானமூர்த்தியை சிரசு பர்யந்தம் ஏற்றிவைத்து, அந்த மூர்த்தியே தேஜோமயமாகியதாக த்யானித்து, அந்த தேஜஸ் சுவாசத்தின் வழியாக வெளியில் வரு வதாகநினைத்து, கையில் புஷ்பாக்ஷதைகளை எடுத்துக்கொண்டு, அந்த புஷ்பாக்ஷதாஞ்சலியுடன் இந்த தேஜோமயமான தேவியை மேற்சொன்ன புஸ்தக மண்டலத்தில் ஆவாஹனம் செய்யவேண் டியது. முதலில் ஹ்ருதயத்தில் த்யானிக்கும்பொழுது கீழ்க் கண்ட ச்லோகங்களின் அர்த்தப்படி த்யானம் செய்யவேண்டும்.

𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌜𑌗𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌂 𑌶𑌾𑌰𑌦𑌾𑌂 𑌵𑌿𑌶𑌦𑌪𑍍𑌰𑌭𑌾𑌮𑍍 ।
𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌸𑌨𑌾𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌮𑍍𑌬𑌕𑍀𑌂 𑌶𑌶𑌿𑌭𑍂𑌷𑌣𑌾𑌮𑍍 ॥

(வ்ரதசூடாமணி)

வெண்டாமரை மலரில் அமர்ந்து, முக்கண்ணோடும், சந்த்ரகலையோடும், வெண்மையான காந்தியுடன் விளங்கும் சாரதா தேவியை நமஸ்கரித்துப் பூஜிக்கவேண்டும்.

ப்ரணவாஸநஸம்ரூடாம் ததர்த்தத்வேந நிஶ்சிதாம் ।
ஸிதேந தர்ப்பணாபேந வஸ்த்ரேண பரிவேஷ்டிதாம் ॥
ஶுப்ராம் ஶுப்ராம்ஶுகாம் தேவீம் ஶரச்சந்த்ரநிபாநநாம் ॥

(கல்பமஞ்சரி)

ஓங்காராஸனத்தில் ஆரோஹணித்து ஓங்காரத்தின், பொருளே ஆகி நின்று, வெண்மையாகவும், கண்ணாடியின் ஸ்வச்சம்போன்ற ஆடையால் அலங்கரிக்கப்பட்டு, சரத்கால சந்த்ரனுக்கு ஒப்பான முக மண்டலத்தோடு நாதப்ரஹ்மமே உருவெடுத்த ஸ்ரீ ஸரஸ்வதி தேவியை த்யானித்துப் பிறகு கீழ்க்கண்ட ச்லோகத்தினல் ஆவாஹனம் செய்யவேண்டும.

அத்ராகச்ச ஜகத்வந்த்யே ஸர்வலோகைகபூஜிதே ।
மயாக்ருதாமிமாம் பூஜாம் ஸம்க்ருஹாண ஸரஸ்வதி ॥

"இப்புஸ்தகமண்டலத்தில் தாங்கள் வீற்றிருந்து ஸான்னித்யத்தை அளிக்கவேண்டும். உலகமெல்லாம் பூஜிக்கும் ஸரஸ்வதி தேவியே நான் செய்யும் இச் சிறு பூஜையை அங்கீகரித்துக் கொள்ளவேண்டும்", என்று ஆவாஹனம் செய்யவேண்டும். மூல நக்ஷத்திரத்தன்று இவ்விதம் ஆவாஹனம் செய்து, லகுபூஜை செய்துகொண்டு, பூர்வாஷாட (பூராடம்) நக்ஷத்திரத்தன்றும் ஸாமான்யமாக பூஜை செய்து, உத்தராஷாடா (உத்தராடம்) நக்ஷத்ரங்கூடிய மஹாநவமியன்று விசேஷமான மஹாநைவேத்யத்துடன் ஆஸனம், பாத்யம், அர்க்யம், ஆசமனீயம், மதுபர்க்கம், பஞ்சாம்ருத ஸ்னனம், வஸ்த்ரயுக்மம் (இரு வெண்பட்டுகள்), உபவீதம், ஆபரணம், குங்குமம், மை, சந்தனம், அக்ஷதை, புஷ்பமாலே, தூபம், தீபம், நைவேத்யம், தாம்பூலம், கற்பூரம், ஹாரத்தி, புஷ்பாஞ்சலி, ப்ரதக்ஷிணம், நமஸ்காரம், இவ்வுபசாரங்களை கல்பத்தில் சொல்லப்பட்ட ச்லோகங்களைக் கொண்டு செய்து, கடைசியில் ப்ரார்த்தனை செய்யவேண்டியது. கல்பத்தில் சொல்லப்பட்ட ஸர்வாங்கபூஜை, அஷ்டோத்தர அர்ச்சனைகளுக்கு முன் (1) ஸரஸ்வத்யை நமஃ (2) பாரத்யை நமஃ

(3) வாக்தேவதாயை நமஃ (4) மாத்ருகாயை நமஃ (5) ஹம்ஸாஸனாயை நமஃ (6) சதுர்முக ப்ரியாயை நமஃ (7) வேதசாஸ்த்ரார்த்த தத்வக்ஞாயை நமஃ 8) ஸகல வித்யாதி தேவதாயை நமஃ என்ற எட்டு நாமாக்களைக் கொண்டு முறையே எருக்கு, ஜண்பகம், புன்னை, நந்த்யாவட்டை, பாதிரி, கண்டங்கத்ரி, அரளி, தும்பை, இவ்வெட்டு புஷ்பங்களை ஸமர்ப்பிக்கவேண்டும். கடைசியில் ப்ரார்த்தனை செய்யும் பொழுது,

> 𑌦𑍋𑌰𑍍𑌭𑌿𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌿𑌸𑍍𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌮𑌣𑌿𑌮𑌯𑍀𑌮𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌂
> 𑌦𑌧𑌾𑌨𑌾 𑌹𑌸𑍍𑌤𑍇𑌨𑍈𑌕𑍇𑌨 𑌪𑌦𑍍𑌮𑌂 𑌸𑌿𑌤𑌮𑌪𑌿 𑌚 𑌶𑍁𑌕𑌂
> 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌂 𑌚𑌾𑌪𑌰𑍇𑌣 । 𑌭𑌾𑌸𑌾 𑌕𑍁𑌨𑍍𑌦𑍇𑌨𑍍𑌦𑍁𑌶𑌙𑍍𑌖𑌸𑍍𑌫𑌟𑌿𑌕
> 𑌮𑌣𑌿𑌨𑌿𑌭𑌾 𑌭𑌾𑌸𑌮𑌾𑌨𑌾 𑌸𑌮𑌾𑌨𑌾 𑌸𑌾 𑌮𑍇 𑌵𑌾𑌗𑍍𑌦𑍇𑌵𑌤𑍇𑌯𑌂
> 𑌨𑌿𑌵𑌸𑌤𑍁 𑌵𑌦𑌨𑍇 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌸𑍁𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌾 ॥

இந்த ச்லோகத்தையும், மற்றும் கல்பத்திலுள்ள ச்லோகங்களையும் சொல்லவேண்டும்.

"ஸ்படிகமாலையும், புஸ்தகமும், வெண்தாமரைப் பூவும், கிளியும் நான்கு கைகளிலும் தரித்து, குந்த புஷ்பம், சந்த்ரன், சங்கம், ஸ்படிகமணி இவைகளை ஒத்த பரிசுத்தமான காந்தியுடன் விளங்கும் ஸரஸ்வதி எனது முகத்தில் ஸர்வகாலத்திலும் வசித்துக் கொண்டு இருப்பாளாக." (சில த்யானங்களில் வெண்தாமரைக்குப் பதிலாக வீணையும் உண்டு.)

> 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌸𑍁 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑍁 𑌰𑌮𑌤𑍇 𑌯𑌾 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 ।
> 𑌸𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌮𑌹𑍍𑌯𑌂 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌕𑌰𑍋𑌤𑍁 𑌚 ॥

"எந்த ஸரஸ்வதி 14-வித்தைகளில் ஆனந்தித்துக்கொண்டு இருக்கிறாளோ அந்தத் தேவி எனக்கு க்ருபையோடு வாக்ஸித்தியைத் தந்தருள்வாளாக."

பதினான்கு வித்தைகளாவன:— வேதம் நான்கும், ஆகமம் ஆறும், [சிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜோதிஷம், கல்ப ஸூத்ரம்] உபாங்கம் நான்கும் [பதினெண்புராணங்கள், ந்யாய சாஸ்த்ரம், மீமாம்ஸா சாஸ்த்ரம், தர்மசாஸ்த்ரம்].

ஒரு ரூபமில்லாத பரமாத்மா இவ்விதம் தெய்வீக உருவங்களைக் கொள்வது அடியார்களின் மனதில் த்யானகாலத்தில் குடிகொள்வதற்காகத் தான். உருக்கு நெய் சீதளத்தால் வெண்ணிறத்தையும், கெட்டித்தன்மையையும் அடைவதுபோல, உருவமில்லா பரம்பொருள் அடியார்களின் அன்பின் குளிர்ந்த தன்மையால் வெண்ணிறத்தையும், உருவத்தையும் அடைகிறது. மற்றும் 'அ'காரமுதல் 'க்ஷ'காரம் வரையில் உள்ள 51 எழுத்துக்களின் நாதங்கள் எனப்படும் ஒலிகளே ஸ்ரீஸரஸ்வதிதேவியின் உருவமாய் அமைந்து இருக்கின்றன, என்று ஹ்ருதயத்தில் த்யானம் செய்துகொண்டு பூஜிக்கவேண்டும்.

இவ்விதம் மஹாநவமியில் பூஜைசெய்து, அன்னபலியிட்டு, ச்ரவணநக்ஷத்திரத்தன்று தேவியை யதாஸ்தானம் செய்து, படிக்க ஆரம்பிக்கவேண்டும். மூலநக்ஷத்திர முதல் உத்திராட நக்ஷத்திரம் முடிய மௌனமாக இருந்து, ச்ரவண நக்ஷத்திரத்தில் படிப்பு ஆரம்பித்தால், நிறைந்த வாக் ஸித்தி கிடைக்கும். அறிவின் பயனை அடைவார்.

[illegible] ।
[illegible] ॥

இப்படிக்கு,

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையோம்.

ஸ்ரீ மஹாபாரதம் பிரஸ், கும்பகோணம்.
PIC. TE. 4,/17-10-47-C. 5000.